**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | சித்திரக்கலை – I | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**

➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**


❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.


| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |


## பகுதி – I

❖ **வினா இல 1 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகச் சரியான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவு செய்க.**


A


B


C


D


E

agaram.lk

*1)* A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பம்.
1. கிரேக்க காலத்து தேவதையைக் காட்டும் சிறப்பான சிற்பமாகும்.
2. கிரேக்க தொண்மைக் காலத்திற்குரிய சமோதராசின் வெற்றி தேவதை.
3. கிரேக்க சிற்பக் காலத்திற்குரிய சமோதராசின் வெற்றி தேவதை.
4. கிரேக்க ஹெலினிஸ்ட் காலத்திற்குரிய சமோதராசின் வெற்றி தேவதை.
5. கிரேக்க புராதன காலத்தை காட்டும் மிகச்சிறந்த சிலையாகும். (.........)

*2)* B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பம்.
1. சிந்தனையில் ஈடுபட்டுள்ள ஒருவரைக் காட்டும் சுடுமண் சிற்பமாகும்.
2. மைக்கல் அஞ்சலோவினால் நிர்மாணிக்கப்பட்ட தசை திரட்சியினை சிறப்பாக காட்டும் சிற்பமாகும்.
3. நவீன சிற்பக்கலைஞர் “ஒகஸ்தே ரொடினினால்” நிர்மாணிக்கப்பட்ட சிந்தனையாளர் சிற்பமாகும்.
4. நவீன சிற்பக் கலைஞர் ஹென்றி மூர் அவர்களின் பூங்கா நிர்மாணிப்பு சிற்பமாகும்.
5. உரோமானிய நிர்மாணிப்புக்களில் சிறப்பான தனிநபர் சிற்பமாகும். (..........)

3) C என்ற சிற்பத்தினால் வெளிப்படுத்தப்படுவது,
1. சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட நடராசர் சிலையாகும்.
2. சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வைரவர் சிலையாகும்.
3. சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சோமஸ்கந்த சிலையாகும்.
4. சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட தட்சணாமூர்த்தியாகும்.
5. சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிச்சாடனர் வடிவமாகும். (……)

4) D என்ற சிற்பத்தினால் வெளிப்படுத்தப்படுவது,
1. சஹரி ப்.்.லொல் சிலை
2. துஸ்தரக்கிரியாவ புத்த சிலை
3. கத்ரா புத்த சிலை
4. பிரெகம் புத்த சிலை
5. தக்தி பஹீர் புத்த சிலை (……)

5) E என்ற சிற்பத்தின் மூலம்.
1. உரோமர்கள் தமது சிற்ப ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர்.
2. அரச கீர்த்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.
3. தனிநபர் குணப்பண்புகளை சிறப்பாக காட்டியுள்ளனர்.
4. முக அமைப்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளனர்.
5. மோடிப்படுத்தப்பட்ட பண்புகளை உள்வாங்கியுள்ளனர். (……)

➢ **06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையினை தெரிவுசெய்க.**

6) பொலன்னறுவை திவங்க சிலைமனையின் பழமையான ஓவியங்களினால் சித்தரிக்கப்படுவது,
1. புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்களாகும்.
2. பௌத்த சமய வரலாற்றுச் சம்பவங்களாகும்.
3. புத்த ஜாதகக் கதை செய்திகளாகும்.
4. இறைவன், போதிசத்துவர் எண்ணக்கருக்கள் பற்றிய செய்திகளாகும்.
5. தேரவாதக் கொள்கை பற்றிய செய்திகளாகும். (……)


7) சுவரொட்டிச் சித்திரத்தினுள் விசேடமாகக் காணப்பட வேண்டியது,
1. செய்தி வேகமாகவும் தெளிவாகவும் குறியீட்டுத் தன்மையுடையதாகவும் இருத்தல்.
2. தட்டையான நான்கு வர்ணங்களைக் கொண்டிருத்தல்.
3. பிரகாசமான வர்ணமும் இயற்கையான வடிவமைப்பையும் பயன்படுத்தல்.
4. வடிவங்கள் வேறாகும் வகையில் வெளிக்கோடுகளைப் பயன்படுத்தல்.
5. சமதள அச்சு முறையில் அச்சுப் பதித்தல் செய்ய முடிதல். (……)

8) பொருட்கூட்டம் பார்த்து வரையக் கற்றலின் நோக்கமானது,
1. சுதந்திரமான இரேகை மூலம் பொருட்களின் இயல்பை வெளிப்படுத்தல்.
2. இரேகை தொடர்பான தேர்ச்சியைப் பெறுதல்.
3. பொருட்களின் இயல்புகளை ஆக்கச்சிறப்புடன் வரைவதற்குப் பழகிக் கொள்ளல்.
4. அடிப்படைக் கோட்பாடுகளை பற்றிய விளக்கத்தைப் பெறுதல்.
5. வர்ணப் பயன்பாட்டின் திறனைப் பெறுதல். (……)

9) முகலாய, ராஜ்பட் ஆகிய பெயர்களினால் அறியப்படும் ஓவிய மரபுகள் இரண்டும்,
1. ஒன்றுக்கொன்று சமமான தொனிப்பொருள்களில் ஓவியங்கள் வரையப்பெற்ற சமகால நிறுவனங்களாகும்.
2. முகலாய மன்னர்களால் இந்தியாவின் மத்திய, மலைநாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கலை நிலையங்களாகும்.
3. முறையே சமயத் தொனிப்பொருளையும் லௌகீகத் தொனிப்பொருளையும் சித்திரிப்பனவாகும்.
4. முறையே அரச தொனிப்பொருளையும், இந்து சமய, இலக்கியத் தொனிப்பொருளையும் சித்தரிப்பனவாகும்.
5. முறையே அரச தகவல்களையும் சமூகத் தகவல்களையும் சித்திரிப்பனவாகும். (……)

10) கம்பளைக் காலத்திற்குரிய கடலதெனிய விகாரை.
1. திராவிடக் கட்டடக்கலை பண்புகளுக்கமைய நிர்மாணிக்கபட்ட பௌத்த விகாரையாகும்
2. ஆரம்பத்தில் இந்துக்கோயிலாக இருந்து பிற்காலத்தில் விகாரையாக மாற்றப்பட்டதாகும்
3. இந்துக்களான திராவிடக்கடவுளால் நிர்மாணிக்கப்பட்டதாகும்
4. கருங்கல்லால் நிர்மாணிக்கபட்ட பௌத்த விகாரையாகும்
5. கம்பளைக் காலத்திற்குரிய தனித்துவமான விகாரையாகும். (……)

❖ *11 - 15 வரை கீழே தரப்படும் **P, Q, R, S, T** எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.*



**P**



**Q**



**R**



**S**



**T**

11) P என்ற எழுத்தில் நாகரிகத்திற்குரிய சில
1. அமர்ணா காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுப் பெண்சிலைத் தொகுதிகளுள் ஒன்றாகும்
2. எகிப்திய பாரம்பரிய கலைப் பண்புகளை வெளிப்படுத்தும் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுச் சிலையாகும்
3. கீசாயியில் இருந்து அமர்ணாவுக்குக் கொண்டுவரப்பட்ட பெண் ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்
4. இயற்கை பரிமாணத்துடன் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட வசீகரமான அரசி ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்.
5. அமர்ணா காலத்து வெண்கல சிலையாகும். (……)

12) Q என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள இசுறுமுனியவில் அமைந்துள்ள கல்லில் செதுக்கப் பட்டுள்ள செதுக்கலினால்
1. தீயிற்கு அதிபதியான அக்கினி பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
2. நீருக்கு அதிபதியான வர்ண பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
3. சூரிய வம்சத்தவனான அர்ச்சுனன் நினைவூட்டப் படுகிறான்.
4. அக்கினி பகவானும் வர்ண பகவானும் சித்திரிக்கப் படுகின்றனர்
5. சித்தார்த்தர் நினைவூட்டப்படுவதுடன் 'கந்தக' எனும் குதிரையும் நினைவூட்டப் படுகின்றது. (.......)

agaram.lk

13) R என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள சிலை
1. லூவர் நூதனசாலையில் காணப்படும் சிலையாகும்.
2. சாந்த மரியா டெலா மாளிகையில் காணப்படும் சிலையாகும்.
3. சாந்த பீற்றர் சதுக்கத்தில் காணப்படும் சிலையாகும்.
4. 11 ஆவது யூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறை மண்டபத்துடன் தொடர் புடைய சிலையாகும்.
5. மெடிச்சி குடும்பத்து நினைவு மண்டபத்தில் காணப்படும் சிலையாகும். (……)

14) S என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள பெண் சிலையானது
1. வானவன் மா தேவியை வெளிக்காட்டும் சிலையாகும்.
2. பார்வதி தேவியை வெளிக்காட்டும் தெய்வச் சிலையாகும்.
3. தாராதேவியைக் காட்டும் சிலையாகும்.
4. இந்து சமயத்து வெண்கலச் சிலையாகும்.
5. மாலாதாரா பெண் சிலையாகும். (……)

15) T என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள செதுக்கல்
1. பாரூத் கல்வேலித் தூணில் உள்ள இயக்கி வடிவம்
2. அமராவதி கல்வேலித் தூணிலுள்ள இராட்சதி வடிவம்
3. சாஞ்சி தோரணத்திலுள்ள இயக்கியின் வடிவம்
4. சாலபஞ்சிகா என்னும் பெயரால் இனங்காணப்படும் இயக்கியின் வடிவம்
5. சகல சௌபாக்கியங்களையும் குறியீடாகக் கொண்ட தேவதையின் வடிவம். (……)

➢ *16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையினை தெரிவுசெய்க.*

16) வாகல் கட என்பது,
1. தூபியுடன் தொடர்புடையதாகக் காணத்தக்க செதுக்கல்களைக் கொண்ட தேரர் ஆக்கமாகும்.
2. அமராவதி பண்புகளை வெளிக்காட்டும் செதுக்கல்களைக் கொண்ட வாகல்கட நிர்மாணிப்பாகும்.
3. தூபியொன்றின் நான்கு திசைகளையும் காட்டுவதற்காகச் செய்யப்பட்டதொரு நிர்மாணிப்பாகும்.
4. நிறைகுடத்திலிருந்து வெளிப்படும் கல்பலதா மலரைக் கொண்டதொரு தூணாகும்.
5. தூபியின் புஸ்ப பீடத்துடன் தொடர்புடைய செதுக்கலாகும். (…….)

17) '43 ஆவது குழு' உருவாக்கத்தின்போது முன்னோடிக் கலைஞர்களின் நோக்கமாக அமைந்தது,
1. தொன்மையான சாஸ்திராலய ஓவியக் கலையை பிரபல்யமடையச் செய்தல்.
2. சமகால மேற்கத்தைய கலைஞர்களின் கலைநுட்பங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்துதல்.
3. சுயமாக புத்தாக்கங்களை உருவாக்குதலும் ஓவியக் கலைக்கு புதியதொரு கருத்தை உருவாக்குதலும்.
4. மரபுகளைப் பேணி, கோட்பாடுகளுக்கமைவாக ஓவியங்களை வரைவதற்கான வாய்ப்பேற்படுத்துதல்.
5. உள்நாட்டு ஓவியக் கலையின்பால் புதிய கலைஞர்களை ஊக்குவித்தல். (…….)

18) உண்மை உலகமும் கற்பனை உலகமும் ஒன்றிணைந்த தன்மையை மிகப் பரவலாகக் காணக்கிடைப்பது.
1. அதி யதார்த்த வாதத்திலாகும்
2. கனவடிவ வாதத்திலாகும்.
3. மனப்பதிவு வாதத்திலாகும்.
4. அரூப வாதத்திலாகும்.
5. பிற்பட்ட மனப்பதிவு வாதத்திலாகும். (…….)

19) இந்தியாவின் முகலாய ராஜபத்தான ஓவியங்கள் ஒரேமாதிரியாக காணப்பட்டாலும் ராஜபுத்திர சித்திரங்களில் கரும் பொருளில் வேறுபட்டு காணப்படுவது,
1. யுத்தத்தையும் வீரத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வுகளாலாகும்.
2. அரசையும் சமயத்தையும் சார்ந்த எண்ணக் கருக்களை கொண்ட நிகழ்வுகளால் ஆகும்.
3. தேசிய, இந்து, இலக்கிய எண்ணக்கருக்களையும் கலாச்சாரத்தின் அம்சத்தையும் கொண்டதாலாகும்.
4. இயற்கைச் சூழல்களையும் யுத்த வெற்றிகளையும் சித்தரிக்கப்பட்ட நிகழ்வுகளால் ஆகும்.
5. அரண்மனையையும் அரசர்களது அரச வாழ்க்கையையும் சித்தரிக்கும் நிகழ்வுகளால் ஆகும். (……)

20) "நீடித்த நினைவு " எனும் ஓவியமானது,
1. அதி யதார்த்தவாதக் கலைஞரான மார்க் சாகலின் கற்பனையின் விளைவாகும்.
2. கற்பனையுலகின் அடிப்படைக் காரணிகளை மனக்கண்ணால் காண்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
3. சல்வடோர் டாலியின் அடிமனதிற் தோன்றும் கற்பனையானதோர் எண்ணமாகும்.
4. நனவடிவில் தோன்றும் எண்ணங்களை ஓவியமாகப் படைத்த போல் க்ளீயின் நிர்மாணிப்பாகும்.
5. ஜோன் மீரோவினால் யதார்த்ததையும் உருத்திரிப்பினையும் ஒன்றிணைந்து படைக்கப்பட்ட ஓவியமாகும். (……)

❖ **21- 25 வரை கீழே தரப்படும் L, M, N, O, P எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


L


M


N


O


P

agaram.lk

21) L எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்.
1. ரவீந்திரநாத் தாகூர் 2. அபனீந்திரநாத் தாகூர் 3. நந்தலால் போஸ்
4. ஜெமினி ரோய் 5. அம்ரிதா ஷேர்கில் (……)

22) M எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இவ்வோவியத்துக்கு ஹரி பீரிஸ் வழங்கியுள்ள பெயர்.
1. நாயகி 2. டி சேரம் 3.இந்திராணி
4. சேலைகட்டிய பெண் 5. மாயாதேவி

23) N எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்.
1. றிச்சர்ட் கேப்றியேல் 2. மஞ்சுஸ்ரீ 3. ஸ்டேன்லி அபேசிங்க
4. ஜே. டீ. ஏ. பெரேரா 5. ஜஸ்டின் தொனியகல (……)

24) O என்ற ஓவியத்தின் படைப்பாளி.
1. வின்சட் வான்கோ 2. பீலிங் 3. ஐவன் பீரிஸ்
4. பிக்காசோ 5. மாற்கு (……)

25) P என்ற ஓவியத்தின் காலப்பகுதி
1. மறுமலர்ச்சிக் காலப்பகுதிக்குரியது 2. கிரேக்க காலப்பகுதிக்குரியது
3. உரோம காலப்பகுதிக்குரியது 4. குப்த காலப்பகுதிக்குரியது
5. எகிப்திய புதிய இரசதாணி காலப்பகுதிக்குரியது (……)

❖ **26 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

26) அருகில் காட்டப்பட்டுள்ள காவற்கல் செதுக்கலானது,



1. அனுராதரபுரக்காலத்தின் செதுக்கல்களை நினைவு படுத்துகின்றது.
2. நாகர் மன்னனின் உருவத்தைச் சித்தரிக்கின்ற சிறுபடைப்புச் செதுக்கலாகும்.
3. பல்வேறு குறியீடுகள் ஒன்றிணைந்த புதிய நிர்மாணிப்பாகும்.
4. விகாரைகளின் நுழைவாயிலில் பாதுகாப்பின் குறியீடாக நிர்மாணிக்கப்படுவதாகும்.
5. அனுராதபுரக் காலத்தில் மிக உன்னதமான காவற்கல் என கணிப்பிடப்படுகிறது.
(……)

27) அருகில் காட்டப்படும் இசுருமுனியாவில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்ட செதுக்கல்,




1. கலைப் பாணியுடன் கூடிய பண்பினை சித்தரிக்கும் புடைப்பு செதுக்கல்.
2. இயற்கை கற்பாறையின் அமைப்பை உபயோகித்து செதுக்கப்பட்டுள்ள உயர் புடைப்பு நிருமாணிப்பு.
3. யானைகளின் இயற்கையான செயற்பாட்டு அசைவுகளை சித்திரக்கின்ற புடைப்பு நிருமாணிப்பு.
4. நீரைப் பெறுவதன் பொருட்டான குறியீட்டை வெளிக்காட்டும் உயர் புடைப்பு நிர்மாணிப்பாகும்.
5. யானைகளின் இயற்கையான மெய் நிலைகளைச் சித்தரிக்கும் உயர் புடைப்பு செதுக்கலாகும்.
(……)

28) அருகில் காட்டப்படும் செதுக்கலானது,



1. 4ம் புவனேகபாகு காலத்து யாப்பகூவ மாளிகையில் செதுக்கப்பட்டுள்ள கற்தகட்டுச் செதுக்கலாகும்.
2. 1ம் புவனேகபாகு அரசன் காலத்தில் நுழைவாயில் மண்டப அடித்தளத்தில் காணப்படும் கற்தகட்டுச் செதுக்கலாகும்.
3. கடலாதெனிய விகாரையின் தூண்களில் காணப்படும் தகட்டுச் செதுக்கலாகும்.
4. இசை நடனக் கலைஞர்களைக் காட்டும் கம்பளைக் கால தகட்டுச் செதுக்கலின் ஒரு பகுதியாகும்.
5. பாமர மக்களின் வாழ்கையில் இணைந்துள்ள நிகழ்வுகளை வெளிக்காட்டும் தகட்டுச் செதுக்கலாகும். (……)

29) அருகில் காட்டப்பட்ட செதுக்கல்,



1. டேசியன் யுத்த யுத்த வெற்றியை நினைவுபடுத்த கொன்சன்ரைன் சக்கரவர்த்தியினால் நிர்மாணிக்கப்பட்ட தூண் செதுக்கலாகும்.
2. டேசியன் யுத்த வெற்றியை நினைவுபடுத்துவதற்கு ரயிற்ரஸ் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட வளைவுச் செதுக்கலாகும்.
3. யுத்த காட்சிகளைக் கொண்ட கொன்சன்ரைன் சக்கரவர்த் தியினால் நிர்மாணிக்கப்பட்ட அரைவளைவுச் செதுக் கலாகும்.
4. உரோமானியர்களின் வல்லமை பராக்கிரமத்தை வெளிப் படுத்தும் கட்டிட நிர்மாணங்களிடையே மிக உயரிய நுட்பத்தை வெளிப்படுத்தும் செதுக்கலாகும்.
5. டேசியன் யுத்த வெற்றியை நினைவூட்ட ரஜன் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட ரஜன் தூண் செதுக்கல் தொகுதி. (……)

30) அருகில் காட்டப்படும் பாரத்தின் சாராநாத் குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி சிறந்த புத்தர் சிலையினால்,



1. குப்தர் காலத்திற்குரிய மரபு ரீதியான பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
2. புத்த பகவான் மிகதாயில் முதலாவது தர்ம உபதேசத்தினைச் செய்த சந்தர்ப்பம் வெளிப்படுத்தப்படுகின்றது.
3. புத்தபகவானின் முப்பத்திரண்டு விசேட பண்புகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.
4. சாராநாத் குருகுலத்தில் உருவான புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
5. புத்தபெருமானது சுயபுலனடக்கத்தை (துஸ்தரக்கிரியாவை) வெளிப்படுத் தப்படுகின்றது. (……)

❖ **31 தொடக்கம் 35 வரையாக ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருந்தமான விடையைத் தெரிவு செய்க.**

agaram.lk

31) உற்பத்திப் பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்படும் சுவரொட்டியொன்றில் மிக முக்கியமாக அமைவது.
1. வடிவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு ரீதியாகப் பயன்படுத்தலாகும்.
2. தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சுருக்கமான வாசகமொன்றைப் பயன்படுத்துதலாகும்.
3. நோக்கங்களை எளிமையாகவும் சிக்கலின்றியும் அர்த்தமுள்ள விதத்திலும் விரைவாகவும் வெளிப்படுத்தல் ஆகும்.
4. குறியீட்டு ரீதியான உருவங்களை தளத்துக்கும் வெளிக்கும் பொருந்தும் விதத்தில் திட்டமிடுதலாகும்.
5. சிறந்த நிறையைக் கொண்டதாக வர்ணமயமாக நிர்மானிப்பதாகும். (…..)

32) ஓவியமொன்றுக்கு வர்ணம் தீட்டும் போது ஓவியரொருவர் அழுத்தம் கொடுப்பது.
1. மனங்கவர் தன்மைக்காகும்.
2. தொனிப்பொருளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகும்.
3. கலைநுட்ப பண்பாட்டிற்காகும்.
4. தனக்கேயுரித்தான பாணிக்காகும்.
5. பொருள்களை யதார்த்த பூர்வமாகக் காட்டுவதற்காகும். (…..)

33) மனப்பதிவுவாதக் கொள்கை கட்டியெழுப்பப்பட்டமைக்கான அடிப்படை எதிர்பார்ப்பாய் அமைந்தது,
1. இயற்கை பற்றிய யதார்த்த தன்மையை உரிய விதத்தில் வர்ண ஊடகத்தில் வெளிப்படுத்துதல் ஆகும்.
2. பொருள் பல்வகைமையை அவதானித்து உண்மையை வெளிப்படுத்துதல் ஆகும்.
3. பொருள்களின் மீது விழும் ஒளி, அதனால் ஏற்படும் மாற்றங்களைக் கற்றலாகும்.
4. உண்மை உலகில் பொருள்களின் தன்மையை அதே விதமாக வெளிப்படுத்துதலாகும்.
5. வரையறுக்கப்பட்ட வர்ணங்களைப் பயன்படுத்தி உண்யைான தன்மையை வெளிப்படுத்து தலாகும். (…..)

34) கலை நிர்மானிப்பில் ஒருமைப்பாடு (Unity) என்பது.
1. ஒத்த வர்ணங்களைப் பயன்படுத்துவதாகும்.
2. மன ஒருமைப்பாட்டை வடிவமைத்தலாகும்
3. குழுச் செயற்பாட்டின் மூலம் வடிவமைத்தலாகும்
4. கட்புல வெளிப்பாடுகள் ஒட்டு மொத்தமாக ஒன்றித்து செயற்படலாகும்.
5. புதுப்புது கலைப்பாணிகளில் சங்கமிப்பாகும். (…...)

35) அக்கடமி யதார்த்த வாதத்தில் தோற்றம்.
1. சலோனினை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
2. பிரித்தானிய றோயல் அக்கடமியை கொண்டு உருவாகியது.
3. மறுமலர்ச்சி கலையை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
4. ஒளியியல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது.
5. கனவடிவ வாதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது. (…...)

❖ ***36 – 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட படத்தைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***



36) இவ்வோவியத்தின் படைப்பாளி.
1. சர்வதோர் டாலி 2. ப்ரீடா காலோ 3. ஜெமினி ராய்
4. வஸ்லி கன்திஸ்கி 5. ஜோர்ச் பிராக் (…...)

37) இவ்வோவியத்தின் தொனிப்பொருள்.
1. சம்பாசனையில் ஈடுபட்டிருத்தல். 2. ஐக்கியமடையும் இதயங்கள்
3. பெண்கள் இருவர் 4. நற்பின் அடையாளம்.
5. ப்ரீடா காலோ இருவர் (…...)

38) இவ்வோவியம் வெளிப்படுத்தி நிற்கும் ஓவிய மரபு.
1. மனப்பதிவு வாதம் 2. பின்மனப்பதிவு வாதம் 3. கனவடிவ வாதம்
4. மீ யதார்த்த வாதம் 5. அரூப வாதம். (…...)

39) வரையப்பட்ட ஊடகம்.
1. நீர் வர்ணம் 2. பஸ்ரல் வர்ணம் 3. எண்ணெய் வர்ணம்
4. இயற்கை வர்ணம் 5. கலப்பு வர்ணம் (…...)

40) இவ்வோவியத்தின் சிறப்பான வெளிப்பாடாக அமைவது,
1. கலைஞரின் அழகிய வர்ணச் சேர்க்கையாகும்.
2. யதார்த்தவாத பண்புகளை வெளிப்படுத்த முனைந்தமை.
3. மனித உருவங்களினூடாக கருத்தை வெளிப்படுத்த முற்பட்டமையாகும்.
4. கலைஞர் தனது மனப்பாதிப்பினை ஓவியத்தில் பதிவு செய்ய முற்பட்டமையாகும்.
5. கலைஞர் புதிய முயற்சியொன்றை ஏற்படுத்த முனைந்தமையாகும். (…...)

## பகுதி II

❖ **'அ'பகுதியில் இருந்து இரண்டு வினாக்களுக்கும் 'ஆ' 'இ'பகுதியிலிருந்து தலா ஒவ்வொரு வினா வீதம் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி 'அ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1) **இலங்கையின் மத்திய காலப்பகுதியில் அற்புதமான தூண் செதுக்கல் வேலைப்பாடுகள் நிர்மாணிக்கப்பட்டன.**

i. பனாவிடிய மடத்தின் தூணில் காணப்படும் இரு சிற்பங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. கடலாதெனிய விகாரையில் காணப்படும் கற்தூணின் செதுக்கல் வேலைப்பாட்டினை மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii. எம்பக்கே ஆலயத்தில் காணப்படும் 168 தூண் செதுக்கல்களையும் வகைப்படுத்தி, சிறப்பான அம்சங்களை மதிப்பீடு செய்க. (8 புள்ளிகள்)

2) **இலங்கை ஓவிய வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய நிறுவனமாக 43வது குழு கருதப்படுவது.**

i. இக்குழுவில் கிறிஸ்தவ மத தொனிப்பொருளை ஓவியமாக வரைந்த ஓவியரின் பெயரையும் அவரது ஒரு படைப்பில் பெயரினையும் தருக. (2 புள்ளிகள்)

ii. எல்.பீ.டீ.மஞ்சுஸ்ரீயின் பத்தினி ஆலயம் என்ற ஓவியத்தை மதிப்பீடு செய்க. (5 புள்ளிகள்)

iii. ஜோர்ச்கீட்டின், ஓவியங்களில் காணக்கூடிய கனவடிவ வாதப் பண்புகளை சுருக்கமாக தருக. (8 புள்ளிகள்)

3) **இலங்கையில் ஒவ்வொரு இராசதானி காலத்தில் உருவாக்கப்பட்ட புத்தசிலைகளில் அக்காலத் திற்குரிய பண்புகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது.**

i. அநுராதபுரக்காலத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ள பிறநாட்டின் கலைமரபுகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. கல்விகாரை புத்தசிலைகளில் அவதானிக்கக்கூடிய மகாயான பௌத்த எண்ணக்கரு அம்சங்களை சுருக்கமாக மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii. மத்திய கால புத்தசிலைகளில் காணக்கூடிய விசேட பண்புகளை உதாரணத்துடன் விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

### பகுதி 'ஆ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

4) **தென்னிந்தியாவில் பல்லவ, சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டட, சிற்பக்கலை எழுச்சி பெற்றதை அவதானிக்கலாம்.**

i. பல்லவர் கால குடைவரைக் கோயில் இரண்டின் பெயரினைத் தருக. (2 புள்ளிகள்)

ii. சோழர் காலத்து "பிச்சாடனர்" சிற்பம் பற்றி சுருக்கமாக குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii. மகாபாலிபுரத்தில் காணப்படும் பிரமாண்டமான கற்சிற்பமாகி "கங்கையின் இறக்கம்" எனும் சிற்பத்தினை மதிப்பீடு செய்க. (8 புள்ளிகள்)

5) **மெகலாயக்கலையும், இராஜபுத்தானிய கலையும் சமகாலத்தில் வளர்த்த கலை மரபுகளாகும்.**

i. இராஜபுத்தானிய கலைஞர்களுக்கு ஓவியத்தின் விடயப்பொருளை பெற உதவிய நூல்கள் இரண்டின் பெயரினைத் தருக. (2 புள்ளிகள்)

ii. இராக .இராகினி சித்திரங்கள் தொடர்பாக சுருக்கமாக விமர்சனத்தை முன்வைக்குக. (5 புள்ளிகள்)

iii. மொகலாய ஓவியங்களின் அடிப்படைப் பண்புகளை உதாரணங்களுடன் விமர்சிக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk

## பகுதி 'இ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6) உரோமக் கலையானது கிரேக்க கால கலை மூலக்கூறுகளில் இருந்து வளர்ச்சி பெற்ற கலை வடிவமாகும்.**

i. கிரேக்க ஹெலனிஸ்ட் கால சிற்பங்கள் இரண்டின் பெயரினைத் தருக. *(2 புள்ளிகள்)*

ii. உரோமானிய தலைச்சிற்பங்களின் பண்புகளை உதாரணங்களுடன் சுருக்கமாகத் தருக. *(5 புள்ளிகள்)*

iii. உரோமானிய பொம்பெய் நகரத்தின் விலா மிஸ்டரிஸில் அலங்கரிக்கப்பட்ட ஓவியங்கள் தொடர்பாக விமர்சிக்குக. *(8 புள்ளிகள்)*

**7) ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால சிற்ப மரபுகளை நிராகரித்து பிற்காலத்தில் நவீன சிற்ப மரபு உதயமானது.**

i. மறுமலர்ச்சிக்கால சிற்பங்கள் இரண்டின் பெயரினைத் தருக. *(2 புள்ளிகள்)*

ii. ஹென்றி மூரின் "சாய்ந்திருக்கும் பெண்" என்ற சிற்பத்தைச் சுருக்கமாக மதிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iii. "கலேஸ் நகரத்து குடிமக்கள்" என்ற தொகுதிச் சிற்பத்தின் பண்புகளை விமர்சிக்குக. *(8 புள்ளிகள்)*

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :- 13 (2019) | சித்திரக்கலை – II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :

- ✶ உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :- 13 (2019) | சித்திரக்கலை – III | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**

- ✶ உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- ✶ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)

**“அ”, “ஆ”, “இ” பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

பகுதி “அ”

சித்திர ஒழுங்கமைப்பு

01) யானை சரணாலயத்தில் பார்வையிடுவோர்

02) மீன் பிடித்து எடுத்துவரும் மீனவர்கள் கரைக்கு திரும்புதல்

03) கிணற்றடியில் சுவாரசியமாக உரையாடலில் ஈடுபட்டிருக்கும் பெண்கள்

agaram.lk

பகுதி “ஆ”

அலங்கார ஆக்கம்

04) றோசாப் பூக்களையும் இலைகளையும் பரவலடையும் விதத்தில் சீத்தைத் துணி ஒன்றுக்குப் பொருத்தமான பரவுருப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

05) நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பற்திக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான $2 \times 3$ அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

06) சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

பகுதி “இ”

கிறபிக் சித்திரம்


07) “நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்” என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.

08) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பதற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.

09) நாட்டின் பிரசித்தி பெற்ற கலைஞர் ஒருவரின் பிறந்தநாள் வாழ்த்துக்கான வாழ்த்துமடல் ஒன்றை நிர்மாணிக்குக.

மேற்பார்வையாளருக்குரியது

நிலைப்பொருட்கூட்ட வரைதல்
(ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் அமைப்பு)



ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்

(1) பெட்டி
(2) துவாய்
(3) கிளாஸ்
(4) பென்சில்
(5) மண்வாஸ்
(6) குறோட்டன் கிளை